Written by Administrator
Friday, 10 July 2009 06:31 -

□□□□□□□□

10.07.2009

கோவை வெள்ளியங்காட்டில் பில்லூர் 2வது குடிநீர் திட்ட கத்திகிரிப்பு நிலையப்பணிகள் முழுவீச்சில் நடக்கின்றன. உள்படம்: திட்டப்பணியை கலெக்டர் உமாநாத், மாநகராட்சி கமிஷனர் அன்கல்மிஸ்ரா மற்றும் அதிகாரிகள் பார்வையிட்டனர்.

பில்லூர் 2வது திட்டப்பணி முடிந்தால்

கோவை மாவட்டம் முழுக்க தாராளமாக குடிநீர் சப்ளை

ஆய்வுக்கு பின் கலெக்டர் பேட்டி

கோவை, ஜூலை 10 கோவை மாநகராட்சி சார் பில் மேற்கொள்ளப்படும் பில்லூர் அணு இட்டப்பணிகள் முடிவடைந்தால் மாவட்டத்தில் உள்ள 442 பகுதிகளுக்கு தாராளமாக குடிநீர் விநியோகம்செய்ய முடியும் என கலெக்டர் உமாநாத் தெரிவித்தார்.

கோவை மாநகராட்சி நகர் புறமைப்புத் திட்டத்தின் கீழ் பில்லூர் 2வது குடிநீர் திட்டம்செயல்படுத்தப்பட்டு வருகிறது. 19 மாதங்களுக்கான பணி முடிக்கும் இட்டத்தில் பணிகள் வேகமாக நடக்கிறது. வெள்ளியங்காடு பகுதியில் கத்திகிரிப்பு நிலையம் அமைக்கும் பணியும், நாயனூர் நீராவம் அழிவே சூறாவ பதிப்பு பணியும் நடந்து வருகிறது. கலெக்டர் உமாநாத், மாநகராட்சி கமிஷனர் அன்கல் மிஸ்ரா ஆகியோர் நேற்று தேரில் சென்று ஆய்வு செய்தனர். கலெக்டர் உமாநாத் கூறியதாவது

கோவை மாநகராட்சியின் தண்ணீர் தேவைகாக பில்லூர் 2வது இட்டப்பணிகள் செயல்பட்டு வருகிறது. இப்பணி 6 பகுதிகளாக நடந்து வருகிறது. அடுத்தாண்டு ஜூனுக்குள் பணி முடிவடையும். கோவை மாநகராட்சிக்கு மட்டும் தினமும் 12.5 கோடி லிட்டர் குடிநீர் கிடைக்கும். பில்லூர், சிறுவாணி என சேர்த்து மொத்தம் 20 கோடி லிட்டர் குடிநீர் கிடைக்கும். பில்லூர்-ல் இட்ட அப்பணி யிலேயே பில்லூர்-2வது இட்டம் நடக்கிறது.

இத்திட்டம் நிறைவேறினால் கோவை மற்றும் சுற்றுப்பற பகுதிகளில் சிறப்பாக குடிநீர் வழங்க முடியும். குடிநீரமுழங்கும் அளவை விட ஒரு மடங்கு அதிகம் குடிநீர் விநியோகம் செய்யக்கூடும். கோவை மாநகராட்சிக்கென தனியாக பில்லூர் 2வது திட்டம் செயல்படுத்தப்படும் போது பில்லூர்-1 இட்டதில் நீர் மிகுதியாக கிடைக்கும். இதன் மூலம் சிறு சிறு மக்கள் உட்பட மாவட்டத்தில் 442 பகுதிகளுக்கு சிறப்பாக குடிநீர் வழங்க முடியும். இலவசமான பகுதிகள் பயனடையும். திட்டப்பணி விரைந்து முடிக்க தேவை யான அனைத்து உபகரணமும் மாநகராட்சி கமிஷனர் அன்கல் மிஸ்ரா மேற்கொண்டு வருகிறார். ஒப்பந்தகாரரும் துரிதமாக பணி மேற்கொண்டு வருகின்றனர்.

ஒப்பந்த காலத்துக்குள் பணி முடியும்

மாநகராட்சி கமிஷனர் அன்கல் மிஸ்ரா கூறியதாவது

பில்லூர் 2வது குடிநீர் திட்டம் பணி 5 பகுதிகளாக (பேக்கேஜ்) பிரிக்கப்பட்டு நடக்கிறது. இதில் 5 பகுதிகளுக்குரிய பணிகள் வேகமாக நடக்கிறது. இந்தாண்டு பணி உத்தரவு வழங்கி 3 மாதமாகி விட்டது. தற்போது குறுகிய காலத்திலேயே விரைவான பணி நடப்பது தெரிவவந்துள்ளது.

இப்பணிக்கான ஒப்பந்த காலம் 18 மாதங்கள் 2010ம் ஆண்டு அக்டோபர் வரை உள்ளது. அதற்கு முன்னரே பணி முடிவடையும் என எதிர்பார்க்கிறோம். ஒப்பந்ததாரர்களும் பணியை விரைவில் முடிப்பதாக தெரிவித்துள்ளனர். இத்திட்டம் முடிவடைந்த பிறகு கோவை மாநகராட்சிக்கு சிறுவாணி, பில்லூர் மூலம் 20 கோடி லிட்டர் குடிநீர் விநியோகம் கிடைக்கும். குடிநீர் பிச்சை வாரு ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு 135 லிட்டர் குடிநீர் வழங்க முடியும். எதிர்காலத்தேவை கருதியே இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அடுத்து வரும் 30 ஆண்டு காலம் குடிநீர் தேவைக்கருதி இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.